# பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். லூக் 1 : 30

**‘என் கிருபை உனக்குப் போதும்’**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரனே, சகோதரியே,

“பயப்படாதே” “**நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்**”–ஆமென்

**பரிசுத்த பவுல் கூறுகிறார் :** என் மாம்சத்திலே, ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக்குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன்.

அதற்கு அவர் **என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளக்கும்–**என்றார்.

சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று கூறின பேதுருவிடம், இயேசு பார்த்து, மூன்றாம் தரமாக,

**யோனாவின் குமாரனாகிய சீமோனே!**

**என்னை நேசிக்கிறாயா ?–**என்றார்

என்னை நேசிக்கிறாயா என்று அவர் தன்னை மூன்றாம் தரம் கேட்டபடியினால், பேதுரு துக்கப்பட்டு, ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்.

மூன்றாம் தரமாக, பேதுருவைப் போல, துக்கப்பட்டு, இருதயத்தை தேவனுடைய சமூகத்தில் ஊற்றிக் கொண்டிருக்கும் என அன்பு சகோதரனே, சகோதரியே,

பவுலைப் போல, மூன்று தரமாக உனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் முள் நீங்கும் படியாக, போராடிக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இயேசுவின் தாயாகிய மரியாளைப் போல, “இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ”–என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**பயப்படாதே! நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.**

**சங்கீதம் 147 : 11 சொல்கிறது :** தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல், கர்த்தர் பிரியமாயிருக்கிறார். – என்பதாக.

**ஆனால் இதே நேரத்தில், மீகா 7 : 18 சொல்கிறது.**

அவர் கிருபை செய்ய விரும்புகிற படியால், அவர் என்றென்றைக்கும் கோபம் வையார். அவர் திரும்ப, நம்மேல் இரங்குவார்.

நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம், சமுத்திரத்தின் ஆழங்களிலே போட்டு விடுவார். ஆமென். அல்லேலூயா.

**ஏசாயா 54:8 சொல்கிறது :** அற்பகாலம் மூண்ட கோபத்தினால், என் முகத்தை, இமைப்பொழுதும் உனக்கு மறைத்தேன். ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்– என்பதாக.

**ஏசாயா 54:10 :** மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலை பெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளையே,

**புலம்பல் 3 : 22 சொல்கிறது. : நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே–**என்பதாக.

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே,

இந்த மாதம் உங்களுக்கு விசேஷ மாதமாகவும், மகிழ்ச்சியின் மாதமாகவும் இருக்கும்படியாக இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

**பக்தன் பாடுகிறார்**

கிருபையிதே, தேவ கிருபையிதே, தாங்கி நடத்தியதே,
இயேசுவிலே பொன் நேசரிலே,
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம். அல்லேலூயா.

**“பயப்படாதே”**

**“நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்”–ஆமென்.**